**செய்தி வெளியீடு எண்: 792** **நாள்: 14.11.2019**

**<u>செய்திவெளியீடு</u>**

அறிவியல்நகரம், 2018 ஆம் ஆண்டிற்கான‘‘தமிழ்நாடுஇளம் அறிவியலாளர் விருது’’, ‘‘தமிழ்நாடுமுதுநிலைஅறிவியலாளர் விருது’’ மற்றும் ‘‘தமிழ்நாடுவாழ்நாள்அறிவியல்சாதனையாளர் விருது’’க்கான முன் மொழிதல் படிவம், விண்ணப்பப்படிவம், விண்ணப்பிக்க அடிப்படை தகுதிகள் மற்றும் விதிகள் ஆகியவற்றை தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. இவ்விருதிற்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளஅறிவியலாளர்கள்அவர்களுக்கு தேவையான விண்ணப்பபடிவம், விண்ணப்பிக்க தேவையான அடிப்படை தகுதிகள் மற்றும் விதிகள் பற்றிய விவரங்களை **<u>www.sciencecitychennai.in</u>** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

நிரப்பப்பட்ட முன் மொழிதல் படிவத்தை மற்றும் விண்ணப்பப் படிவத்தை அறிவியல் நகரத்திற்கு 20.12.2019 அன்று மாலை 5.30 மணிக்குள் தபால் மூலம் அல்லது நேரில் அளித்திட வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**